Koviloor Digital Library

ACC·NO. 46035

ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசாய நம:

வெங்கடாசல மஹாத்மிய மென்னும்

ஸ்ரீ திருவேங்கட - - ஸ்தல புராணம்.

ஸ்ரீ வெங்கடேஸ்வர பத்மாவதி திருக்கல்யாண மகோற்சவ வைபவம்.







இஃது

இ. முனுசாமி நாயுடு அவர்களால் இயற்றியதை,

திருப்பதி புஸ்தக வியாபாரம்

எஸ். வி. ருக்மிணையநாயுடு அவர்களால்

திருப்பதி ஸ்ரீ பத்மாவதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1933

இதன் விலை] All Rights Reserved. [அணா 2.

Koviloor Digital Library

திருப்பதி

திவ்யக்ஷேத்திர படங்கள்.

இஞ்சி 10 X 14 சைஸ் படங்கள்.

திருப்பதி திவ்யக்ஷேத்திர படம் சாதா ஒன்றுக்கு	0	1	0
டிடோ மூன்று கலர்	0	1	6
கல்யாண வெங்கடேஸ்வரர் சாதா	0	1	0
டிடோ மூன்று கலர்	0	1	6
ஏகாந்த வெங்கடேஸ்வரர் சாதா	0	1	0
டிடோ மூன்று கலர்	0	1	6
பத்மாவதி தாயார் சாதா	0	1	0
மூன்று கலர்	0	1	6
திருப்பதி கோவிந்தராஜர் சாதா	0	1	0
மூன்று கலர்	0	1	6
திருப்பதி ஸ்ரீகோதண்டராமர் சாதா	0	1	0
டிடோ மூன்று கலர்	0	1	6
காளஹஸ்தி க்ஷேத்திர படம் சாதா	0	1	0
டிடோ மூன்று கலர்	0	2	0
பத்ராசல க்ஷேத்திர படம் சாதா	0	1	0
டிடோ மூன்று கலர்	0	1	6
திருவண்ணாமலை க்ஷேத்திரபடம் சாதா	0	1	6
டிடோ மூன்று கலர்	0	2	0


இந்த படங்கள் அரைசைஸ், கால்சைஸ் படங்கள் எங்களிடம் விற்கப்படும். வேண்டியவர்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் ஆர்டர் கொடுத்தால் வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.


Koviloor Digital Library

24-4

உ

திருப்பதி ஸ்தல புராணம்.





திருவேங்கடன் துதி.

திருவேங்கடாவென்றுக் கோடிக்கொண்டாடி உன் திருவடியை
மனதில்நாடி மறவாமல் துதிசெய்ய மலையான பாவமும் மாண்டுப்
போம் மரணபவமும் எரிகின்ற தீயிலே யெரிந்திட்ட பஞ்சுப்போ
லெவ்விதமான வகமும் திருமலையில் வாய்ந்திடும் தேவகணடாண்
மணியே திருவேங்கடத்துமணியே.

சூதமாமுனி சௌனகாதிமுனிவர்களுக்கு
ஸ்ரீ திருப்பதி
ஸ்தல மஹாத்துவத்தைக் கூறுதல்

ஸ்ரீ நைமிசாரண்ணிய வனத்தில் சௌனகாதி முனிவர்கள் சூதமகரிஷியால் சகல புராணங்களையுங்கேட்டு ஆனந்திக்கவர்களாய்

Koviloor Digital Library

ஓர் சுபதினத்தில் சூதமகரிஷியைப் பார்த்து ஓ சுவாமி ! உலகத்தின் கண்ணுள்ள 108 திருப்பதிகளில் ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்டம், தோத்தாத்திரி, சாலக்கிராமம், நைமிஸம், பதரிகாஸ்ரமம், காஞ்சிபுரம், வெங்கடாசல மென்னும் 8 முக்கிய திருப்பதிகளில் வெங்கடாசலம் என்னும் இத்திருப்பதி எல்லாத் திருப்பதிகளிலும் விசேஷித்து சித்திஸ்தலமாய் விளங்குவதற்கு என்னகாரணமென்று கேட்டார்கள்.

இங்ஙனங்கேட்ட சௌனகாதி முனிவர்களைப் பார்த்து சூதமாமுனிவர் மந்தஹாசத்துடன் சொல்லத் தொடங்கினர்.

ஸ்ரீ திருப்பதியின் பிரபாவம்.

இந்த புண்ணிய க்ஷேத்திரம் தென்வடக்காய் முன்னூறுமைல் நீளமும், மேற்கு கிழக்காய் முப்பது மைல் அகல முள்ளதாய் தொளாயிரம் சதுரமைல் விஸ்திரண முள்ளதாயிருக்கிறது. இதற்கு முன்புறம் வெங்கடாசலமென்று பெயருள்ளதாய் அவ்விடத்தில் லக்ஷ்மி பூமிளா சமேதரான ஸ்ரீ வேங்கடேசப்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். மத்தியபாகம் அகோபிலமென்று பேருள்ளதாய் அவ்விடத்தில் லக்ஷ்மிசமேதரான நரசிம்மமூர்த்தி எழுந்தருளி யிருக்கிறார். இந்த மூன்று புண்ணிய க்ஷேத்திரங்களோடு கூடியதாய் முன்புறம் ஆதிசேஷனுடைய பணமண்டலத்தைப்போல் காளிகோபுர ஆரண்யமும், மார்பைப்போல் அஹோபில க்ஷேத்திரமும், வாலைப்போல் ஸ்ரீ சைலமிருக்கின்றது. இந்த புண்ணிய க்ஷேத்திரம், மூன்று லோகங்களிலும் மிகுந்தஸ்தானமானபடியால் இதை பிரதக்ஷணம் செய்தவர்களுக்கு பூபிரதக்ஷணம் செய்ததுபோன்ற நற்பலன்கள் சித்திக்கும்.

ஆதி வராஹசுவாமி அவதரித்தல்.

ஆதியில் ஸ்ரீமந் நாராயணன் திருநாபிக் கமலத்தில் சதுர்முகன் பிறந்து பூதபிரபஞ்சங்களைச் சிருஷ்டிசெய்ய அவைகளை எம்பெருமான் காத்தருளி வந்தார் இவ்விதமாக நடத்துவர பிரம்மாவுக்கு பகல் காலமாகிய நாலாயிரம் யுகங்கள் முடிந்த பிறகு அவர் நித்திரை செய்தனர். அப்பொழுது பிரளயகாலம் நேரிட்டபடியால் சூரியன் அளவில்லாமல் அக்னி கிரணங்களை பூமியின்பேரில்வீசினன் மேகங்கள்

Koviloor Digital Library

அபாரமாக மழை பெய்தன. அப்பொழுது ஜலப்பெருக்கு அதிகரித்தபடியால், அந்த பாரத்தைத் தாங்காது பூமிகடலுக்குள் மூழ்கிவிட்டது, அதை இரண்யாக்ஷன் என்கிற ஓர் அசுரன் ரஸாதல லோகத்துக்குக் கொண்டுபோய் வைத்திருந்தான். பிரம்மாவின் இரவு காலம் முடிந்து அவர் தூக்கத்திலிருந்து விழிக்கிற சமயத்தில், நாராயணன் சுவேத வராக அவதாரத்தைக்கொண்டு கடலுக்குள் மூழ்கி மறுபடியும் பூமியைமேலுக்கு எடுக்கையில், இரண்யாக்ஷன் அவரைத்தடுத்து சண்டை செய்ய ஆரம்பித்தான் அப்பொழுது ஹரி வீராவேசத்துடன் அவன் சிரசைத் துண்டுதுண்டுகளாய் கோரைப் பற்களால் கிழித்துக் கொன்றுர் அந்த ரக்தமானது பிரளயஜலத்துடன் கலந்து ரக்தக் கடலைப் போல் நிரம்பிவிட்டது. அதை தேவகணங்கள் பார்த்து பயந்தவர்களாய் வராஹஸ்வாமியை நோக்கி அநேகவிதங்களாய்த் துதித்தார்கள்.

கருடன் வைகுண்டத்திலிருந்து கிரீடாசலத்தைக் கொண்டுவருதல்.

பகவான் இவ்வாறு செய்து திரும்பிப் பார்க்கையில் கைகளைக் கட்டிக்கொண்டு அடியேனாய் நின்றிருந்த கருடனைப் பார்த்து ஓ பக்ஷிராஜனே! நான் இந்த பயங்கர உருவத்துடன் வைகுண்டம் வந்தால் என்னைப் பார்த்து லக்ஷ்மிதேவி பயப்படாளோ, ஆகையால் நான் இந்த பூமியிலேயே வீற்றிருப்பேன் என்று சொன்னுர். அதைக்கேட்டு பக்ஷிராஜன் பகவானை நமஸ்கரித்து சுவாமி, உங்களுடைய பயங்கர உருவத்தைப் பார்த்து அந்த லோகமாதா பயபடமாட்டார்கள். நீங்கள் வைகுண்டம் வரலாமென்று பிரார்த்தித்தான். அதைக்கேட்டு கடவுள் நான் உலகத்தின் கண்ணின்று துஷ்டர்களை சிக்ஷித்து பக்தர்களைக் காத்தருள வேண்டுமாகையால், நீ வைகுண்டம் சென்று லக்ஷ்மிதேவியிடம் தெரிவித்து கிரீடாசலத்தைக் கொண்டுவரும்படி உத்தரவளித்தார் கருடன் ஹரி கட்டளையின்படி வைகுண்டம் சென்று லக்ஷ்மிதேவியிடம் சங்கதிகளைச் சொல்ல அத்தேவி அந்த வாரகமூர்த்தியைப் பார்க்க வேண்டுமாதலால், அவரை வைகுண்டத்திற்கு அழைத்துக்கொண்டு வாவென்று சொல்ல, அ

Koviloor Digital Library

தைக்கேட்டு கருடன் தாயே! நான் அவரையழைக்க அவரது பயங்கரமான ரூபத்தைப் பார்த்து நீங்கள் பயப்படுவீரென்று சொன்னுரென்றான். லக்ஷ்மியம்மாள் மிகுந்த ஆச்சரியத்துடன் அதைக் கேட்டு ஆ! ஹா! பரந்தாமன் அவ்விதமாய் சொன்னாரா எல்லா அவதாரங்களிலும் அவர் பக்ஷத்தில் இருந்த நான் அவர் ரூபத்தைபார்த்து பயப்படுவேனோ? ஆனாலும் அவர் இவ்விடம் வராமல் போனாலும், நான் அவ்விடம் வருவேனென்று சொல்லி வைகுண்டத்திலுள்ள ஓர்கலையோடு தான் கிரீடாசலத்தின்பேரில் எழுந்தருள, கருடன் அப்பர்வதத்தை சிரசின்பேரில் வைத்துக்கொண்டு பூமிக்குக் கொண்டு வந்தான். அப்போது பூமியில் சுவாமிகள் கௌதமியாற்றிற்கு தெற்கில் 60 யோசனை கிழக்கு உப்புக்கடலுக்கு மேற்கில் 5 யோசனை தெற்காயிருக்கும் சுவர்ணமுகி ஆற்றிற்கு வடக்கில் திவ்விய ஸ்தலத்தைப் பார்த்து வீற்றிருக்கையில், கருடன் கிரீடாசலத்தைக் கொண்டுவந்து பூமியின் பேரில் வைத்தான். அப்பொழுது ஹரி லக்ஷ்மி பூநீளாதேவிகளுடன், அப்பர்வதத்தின் பேரில் எழுந்தருள, பிரம்மருத்திராதி தேவகணங்கள் அவ்விடம் வந்து அந்த வராகசுவாமிக்கு சாஷ்டாங்க தண்டனிட்டு, சாந்த ஸ்வரூபத்தைத்தரித்துக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்விதமாகவே லக்ஷ்மீசன் சௌம்ய ரூபத்துடன் ஸ்ரீ திருப்பதியில் எழுந்தருளியவராய், துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்துக்கொண்டு வந்தார்.

நாரதர்

கஸ்யபாதி முனிவர்களிடம் போதல்.

இவ்வண்ணம் வெகு காலமான பின்பு ஸ்ரீ பூநீளாசமேதராய் ஹரி வைகுண்டத்திலுள்ள நித்திய முக்தர்களைப் பார்த்து ஆதரிக்க ஆவலுள்ளவராய் போக வெங்கடாசலத்திலிருந்த வராகசுவாமி விஸ்வகர்மாவால் நிர்மிதமாகிய பட்டணத்தை அந்தர்த்தானம் செய்து இச்சாவிகாரமாய்த் திருந்துக் கொண்டிருந்தார், இந்த சங்கதியை திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் அறிந்து தன் தகப்பனை பிரம்மாவிடம் சொன்னார். பிரம்மதேவர் அதைக்கேட்டு சிந்திக்கவாய் தன் குமாரனை நோக்கி ஹரி பூமியின்கண் இல்லாவிட்டால்

Koviloor Digital Library

மானிடர்கள் பக்தி சிரத்தைகளுடன் சத்கர்மங்களைச் செய்யாமல் பாவசம்பந்தர்களாய் விடுவார்களாகையால் எவ்விதமாகிலும் நீர் ஓர் யுக்தியைச்செய்து ஹரியை மறுபடியும் பூமிக்கு வரவழைக்கவேண்டுமென்று சொன்னார். அதைக்கேட்டு நாரதர் புறப்பட்டு ஜான்பவி ஆற்றங்கரையில் எக்யம் செய்துகொண்டிருந்த கஸ்யபாதி முனிவர்களிடம் சென்று அவர்களை நோக்கி ஓ முனிவர்களே! நீங்கள் செய்யும் எக்ய பலத்தை யாருக்கு தருவீரென்று கேட்டார். அதற்கு அம்முனிவர்கள் மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் யோசித்துக் கொண்டிருக்க, நாரதர் திரிமூர்த்திகளில் சத்வகுண சம்பன்னராய் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடிய மூர்த்திக்கு அப்பலனைக் கொடுங்களென்று சொல்லி திரிலோக சஞ்சாரம்செய்யப் புறப்பட்டு போய்விட்டார்.

திரிமூர்த்திகளை பிருகுமாமுனிவர் சோதித்தல்.

இங்ஙனம் சொல்லி நாரதர் சென்றதும் கஸ்யபாதி முனிவர்கள் திரிமூர்த்திகளில் சத்குண மூர்த்தியை விசாரித்து தெரிவிப்பதற்காக பிருகு மகாமுனிவரை யனுப்பினார்கள். பிருகு மகாமுனிவர் சத்ய லோகஞ்சென்று தபோதனர்கள் சூழ்ந்துவீற்றிருக்கும் பிரமதேவனைப் பார்த்து நமஸ்கரித்து அவர் உத்தர வளிப்பதற்குமுன் ஆஸனாரூடராய் இருக்க அதைப்பார்த்து பிரம்மதேவர் கோபங்கொண்டு மவுனமாயிருக்க அவர் ரஜோகுணத்தரென்றறிந்து, கயிலாயத்திற்குச்சென்று பார்வதி சமேதராயிருந்த சிவபெருமான் அரண்மனைக்குள் திடீரென்று சென்று நின்றார். அந்த ரகசியமான இடத்திற்கு உத்தரவின்றி வந்ததற்காக சிவன் கோபத்துடன் இருந்ததை யறிந்து அவர் தமோகுணரென்றறிந்து பிருகு முனிவர் வைகுண்டஞ் சென்று விஷ்ணுவின் மார்பின்பேரில் தன் பாதத்தால் உதைத்தார். அதைப் பார்த்து மகாவிஷ்ணு கோபித்துக் கொள்ளாமல் திடீரென்று எழுந்து அம்முனிகளுடைய பாதத்திற்கு எவ்வளவு வலியுண்டாயிற்றோவென்று வருந்த, அதைப் பார்த்த பிருகு மகாமுனிவர் ஹரியே சத்வகுணரென்றறிந்து கஸ்யபாதி முனிவர்களிடஞ்சென்று

Koviloor Digital Library

அவ்வரலாற்றைச் சொல்ல அவர்கள் எப்பலத்தை மகாவிஷ்ணுவுக் குசமர்ப்பித்து அநுதினமும் ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளை தியானி த்துக்கொண்டிருந்தார்கள்.

லக்ஷ்மிதேவி ஹரியுடன் கலகம்செய்தல்

அவ்விதமாய் பிருகு மகாமுனிவர் ஹரியின் மார்பில் உதைத்து ப்போக மார்பிலிருந்த லக்ஷ்மியம்மன் பிருகு முனிவர்செய்த கார்யத் தைக்கு ஹரி அவரை தண்டிக்காமல் சன்மானித்தபடியால் கோபித்து க்கொண்டு பகவான் எவ்வளவு சாந்த வசனங்கள் சொன்னாலும் கே ளாமல் வைகுண்டம் விட்டு புறப்பட்டு பூலோகத்தில் கொல்லாபுரம் வந்து சேர்ந்தனன். கொலாபுரத்திலுள்ள பக்தர்கள் பக்தி சிரத் தையுடன் அத்தேவியைப் பூஜித்துக் கொண்டுவர லக்ஷ்மியம்மனுக்கு கொல்லாபுர மகாலக்ஷ்மியென்றும் உலகத்தில் பிரசித்தியுண்டாயிற்று

மகாவிஷ்ணு மறுபடியும் பூலோகத்திற்கு வருதல்.

இவ்விதமாய் லக்ஷ்மியம்மன் பிரிந்துசெல்ல மிகுந்த வருத்த மடைந்தவராய் லக்ஷ்மி தேவியை மறுபடியும் அடைவதற்கென்னி சுவாமியும் வைகுண்டத்தைவிட்டு திருப்பதிக்குவந்து பிரம்மாவால் நிர்மாணம் செய்திருந்த ஓர் புத்துக்குள் பிரவேசித்திருந்தனர்.

சோழராஜன் சாபமடைதல்.

சுவாமி இவ்விதமாய் புற்றில் வந்து சேர்ந்திருக்க தனக்காக அவர் அவ்விதமாய் வந்திருப்பதை யறிந்து லக்ஷ்மியம்மன் மனவ ருத்த மடைந்திருக்கையில் பிரம்மாவும் ருத்திரனும் பசுக்கன்று ரூப ங்களை தரித்துக் கொண்டு லக்ஷ்மியம்மன் முன்னிலையில்வந்து நிற்க அத்தேவி சந்தோஷித்து சோழராஜனுடைய ஊருக்குள் அந்த பசுங் கன்றுகளை யழைத்துக் கொண்டுபோய் விற்றுவிடுகிறதாக வீதிகளில் சாமானிய மானிடவேடம் பூண்டு விலைகூறினாள். அதைக்கேட்டு

Koviloor Digital Library

சோழராஜன் மனைவி குழந்தைகளுக்கு பால் வேண்டுமென்றெண்ணி அந்த மாயஸ்திரீக்கு வேண்டியபொருள் கொடுத்து அந்தப் பசுங்கன்றுகளை வாங்கி தங்களுக்குள்ள 2000 பசுக்களோடு சேர்த்து இடையனுக்கு ஒப்புவித்தாள். அந்தப் பசுக்கன்றுகள் தினந்தோறும் தவறாமல் திருமலையேறி புற்றினிடம் வந்து க்ஷீரத்தால் அப்புற்றிலிருந்த சுவாமியை திருப்திசெய்துக் கொண்டு வந்தார்கள். லக்ஷ்மியம்மன் அதையறிந்து சந்தோஷமுள்ளவளாய் மறுபடியும் கொல்லாபுரம்சேர்ந்திருந்தனள். இப்படியிருக்க தான்வாங்கிய பசுவுக்கு பாலில்லாமல் போவதை சோழராஜன் மனைவியறிந்து இடையனை கண்டித்து பசுவுக்கு பாலில்லாமல் போகிற காரணத்தைக் கண்டுபிடிக்கும்படி கண்டிதமான உத்தரவளித்தாள். அதற்குமேல் இடையன் அந்தப் பசுவோடுகூட மறுநாள் புறப்பட்டுபோக அந்தப்பசு வேங்கடமலை மீதேறி புற்றினிடமாக வந்து பாலை விட்டுவிடுவதைப் பார்த்து கோபங்கொண்டு தன் கையிலிருந்த கோடாலியினல் அதன் நெற்றியின்பேரில் அடித்தான். அப்பொழுது ஹரி தனக்காக பசு அடிப்படக் கூடாதென்று தன்னுடைய சிரசைக் கொடுத்தபடியால் ஹரியின் நெற்றியில் வெட்டுப்பட்டு வழுபனைபாரம் உயரம் ரத்த பிரவாகம் உண்டாயிற்று, அதைப் பார்த்து இடையன் பயந்து நடுநடுங்கி கீழே விழுந்து உதைத்துக்கொண்டு மடிந்தான். அந்த சங்கதிகளை விசாரிக்கும்பொருட்டு பரிவாரங்களுடன் சேழராஜன் அப்புற்றிடம் வர, ஹரி அவனை பேயாய்ப் போகக் கடவதென்று சாபமளித்தார். அப்பொழுது சோழராஜன் பயந்து சாபவிமோசன மடையவென்று ஹரியை அநேகவிதமாகப் பிரார்த்தித்துக்கொள்ள, பரந்தாமன் அவன் சாபம் கலியுகமுடிவில் தீருமென்றும், ஆகாய ராஜன் பெண்ணாகிய பத்மாவதியைத் தான் விவாகம் செய்துக்கொள்ளும்போது நூறுகஜம் நீளமுள்ள நவரத்தின கசிதமான பொன் மகுடத்தைச் செய்து சமர்பித்தால் அதை பிரதி சுக்கிரவாரமும் 6 நாழிகை தரிப்பேனென்றும், அப்போது மாத்திரம் போய் ரூபமில்லாமற் போகுமென்றும் சொன்னார்.



Koviloor Digital Library

வராகசுவாமியை ஹரி சந்தித்தல்.

கடவுள் தன் சிரசின்பேரில் அடி பட்டதற்காக பிரஹஸ்பதியை நினைக்க, அவர் சுவாமியின் முன்தோன்றி பஞ்சை எருக்கம் பாலில்நனைத்து கட்டினால் சிரசின்பேரில் பட்ட காயம் ஆறிப்போகுமென்று சொல்லிப்போயினார். சுவாமி தன் மருந்தை தானே கொண்டுவருவதற்காக புறப்பட்டுபோகையில் எதிரில் விருஷபாசுரனைச் சங்கரித்து வந்துகொண்டிருந்த வராஹ சுவாமியை பார்த்து தான் வைகுண்டத்தில் லக்ஷ்மிதேவியை பிரிந்ததுமுதல் நடந்த வரலாற்றைத் தெரிவிக்க வராகசுவாமி ஹரிக்கு, நூறடி நிலமளந்துக்கொடுத்து தன்னிடம் சமையல் செய்துகொண்டிருந்த வகுளமாலிகை என்பவளை சுவாமிக்கு உபசாரனை செய்யும்படி நேமித்தார். அதற்காக சுவாமி சாமானிய நரனைப்போல் பக்தஜனங்களிடம் பிரார்த்தனா மூல்யமாய் பணங்களைவாங்கி நிலத்தின் கிரயத்தை கொடுக்கிறதாகவும், முன்பூஜை முன்போஜனம் வராஹசுவாமிக்கு கொடுத்துப் பின்னும் தான் புசிக்கிறதாகவும் ஒப்புக்கொண்டனர்.

வகுளமாலிகையின் பூர்வவிருத்தாந்தம்

த்வாபரயுகத்தில் கிருஷ்ணனை வளர்த்துக் கொண்டாடிய யசோத தேவியை பிரம்மா ருணானுபந்தத்தால் ஓர் ஸாதாரண ஸ்திரீயாக உற்பத்தி செய்து வராஹ சுவாமிக்கு சமையல் செய்து அவருக்கு உபசாரனை செய்யும்படி வராஹ சுவாமி சந்நிதியில் நியமித்திருந்தார். அவள்தான் வகுளமாலிகை என்பவள்.

பத்மாவதிதேவியின் ஜனனம்.

பாண்டிய சந்திரகிரி வம்சத்தில் சேர்ந்த ஆகாசராஜனென்கிற ஓர் மன்னவன் நாராயணபுரத்தில் அரசாட்சி செய்துக் கொண்டிருந்தான். அவன் தரணிதேவி யென்கிற ஓர் பெண்ணை விவாகம் செய்துக்கொண்டு வெகுகாலமாய் புத்திரசந்தான மில்லாது போனதால் புத்திரகாமேஷ்டியாகம் செய்வதற்கு நிச்சயித்து பூமியை உழுகையில் அதில் ஆயிரம் இதழ்களுள்ள ஓர் தாமரைக் காலமும் கமல

Koviloor Digital Library

த்தில் ரூபலாவண்ணியமுள்ள ஓர் பெண் குழந்தையும் இருப்பதைப் பார்த்து சந்தோஷித்தவனாய் அதை தன் மனைவியான தாணீதேவி யினிடம் கொடுத்து பத்ம மலரில் பிறந்த அந்தப் பெண்ணுக்கு பத்மாவதியென்னும் பெயரளித்து அத்யந்த பிரீதியுடன் வளர்த்துக் கொண்டு வந்தான்.

பத்மாவதிதேவி பிறப்பின் இரகஸ்யம்.

பூர்வத்தில் லங்காதிபதியாகிய ராவணன் சீதையை கொண்டு போகையில் அக்னிபகவான் அவன் எதிரில்வந்து அடா நீ எடுத்துக் கொண்டு போகும்சீதை உண்மையான சீதையல்ல, இராமர் உண்மையான சீதையை என்னிடம் கொடுத்துப் போனரென்று சொல்லி வேதவதியை உண்மையான சீதையென நிரூபித்து ராவணனிடம் கொடுத்து சீதையை ஒளித்துவைத்திருந்தார். ஸ்ரீராமர் வானரசைனியங்களோடு இலங்கைக்குச் சென்று ராவணனைக்கொன்று மறுபடியும் அயோத்தியாநகரம் சேர்ந்து சீதையம்மனை அக்னிகுண்டத்தில் பிரவேசிக்கும்படி கட்டளையிட அத்தேவி அவ்விதமாகவே அக்னியில் பிரவேசித்து நிற்க அந்த அக்னியில் இரண்டு சீதைகள் இருப்பதைப் பார்த்து ஸ்ரீராமர் ஜானகிதேவியை இந்த ரகசியத்தை சொல்லுமென கேட்க சீதையம்மன் நடக்த விபரங்களை தெரிவித்து தனக்காகம் இலங்கையில் அநந்த கஷ்டங்களை யனுபவித்த வேதவதியை விவாக செய்துகொள்ளுமென பிரார்திக்தனள். அதற்கு ராமர் தான் ஏக பத்தினி விரதனாதால் கலியுகத்தில் ஸ்ரீ வெங்கடாசலத்தில் அவதரிப்பேன், அக்காலத்தில் வேதவதியை மணம்புரிவேனென்று சொன்னார். ஆகையால் அந்த வேதவதி ஆகாசராஜனுக்கு பெண்ணாய் பத்மத்தில் உதித்து பத்மாவதியென்று பிரசித்தி அடைந்தனள்.

ஹரி பத்மாவதிதேவியைச் சந்தித்தல்.

பத்மாவதிதேவி வளர்ந்து யௌவன பருவமடைந்து தன் தோழிமார்களுடன் ஒருநாள் நந்தவனத்தில் பூக்கொய்து விளையாடிக் கொண்டிருந்தனள். இப்படியிருக்கும் சமயம் அவ்விடம் நாரதமுனிவர் வர, அவரைப்பணிந்து பத்மாவதி தன் கையைக்காட்டி சா

Koviloor Digital Library

முக்திரிகம் சொல்லுமெனக் கேட்க நாரதர் பத்மாவதியின் அஸ்தத்தைப் பார்த்து உன்னை ஸ்ரீமந் நாராயணனே பாணிக்ரஹணம் செய்துக்கொள்ளுவாரென்று சொல்லிப் போனார். ஒருநாள் புற்றிலிருந்த ஸ்ரீநிவாச மூர்த்தி வெண்குதிரைமீதாரோகணித்து வேட்டையாடுவதற்கு புறப்பட்டு வருகையில் அவர் கண்முன் ஓர் யானை புலப்பட அதைத் துரத்திக்கொண்டுவந்தார். அந்தயானை வெகுதூரம் ஓடிவந்து தன்னைப் பின்தொடர்பவரைத் திரும்பிப் பார்த்து ஜகத்ரக்ஷகனென்று தெரிந்துக்கொண்டு ஹரியைப் பணிந்து காத்தருளுமெனவேண்டிற்று. ஸ்ரீநிவாசன் அந்த யானையை இரக்ஷித்து திருப்புலத்தில் நந்தவனத்தில்கன்பூக்கொய்துக் கொண்டிருந்த பத்மாவதியைப் பார்த்தார். பத்மாவதியைக் கண்டதும் குதிரையினின்று இழிந்து பத்மாவதியின் பேரில் அடங்காக் காதலுடையவராய் அவளை சமீபத்திற் சென்று தன்னை விவாகம் செய்துக் கொள்ளும்படி கேட்டார். அதைக்கேட்டதும் பத்மாவதி சினந்து தன் தோழிகளைக் கொண்டு ஹரியை கற்களால் அடிக்கும்படி செய்தனள். அப்பொழுது அவ்வடிகளைத் தாளாமல் ஹரியானவர் அவ்விடமிட்டு புறப்பட்டுப்போய் புற்றில் சேர்ந்து பத்மாவதியினுடைய ரூபலாவண்யங்களை நினைத்துருகி பக்தசித்தனாய் வாழ்ந்திருந்தார்.

வகுளமாலிகை தூதுபோதல்.

இங்ஙனமிருந்த ஹரி கிலேசத்துடனிருப்பதைக்கண்ட வகுளமாலிகை மிகவும் விசாரப்பட்டு சுவாமிக்கு அநேக உபசாரங்கள் செய்து அவரால் சங்கதியைத் தெரிந்துக்கொண்டு நானேபோய் எவ்விதமாயினும் பத்மாவதியை இணங்கச்செய்து விவாகம் செய்வதையன்றி வேறொன்றும் அதைப்பற்றி பெருமான் சிந்திக்கவேண்டியதில்லையென்றும் சாந்த வசனங்களைச் சொல்லி நாராயணபுரத்திற்குப் புறப்பட்டனள்.

ஹரி குறத்திவேடம் தரித்தல்.

வகுளமாலிகை இவ்விதமாய் நாராயணபுரம் புறப்பட்டுப்போக என்று சொல்லி அவ்விடம் புறப்பட்டு ஹரி மறுபடியும் திருவேங்

Koviloor Digital Library

உடனே ஹரி அவன் கலியாணப் பிரஸ்தாபனை சரியாய்ச் செய்வா
ளோ செய்யமாட்டாளோ வென்று சந்தேகமுடையவராய் குறத்தி
யைப்போல் வேடம் பூண்டு தந்தத்தால் செய்த நகைகளும் குன்டு
மணி மாலைகளும், சங்கு மோதிரங்களும் தரித்துக்கொண்டு கையிலோ
ர் பிரம்பை வைத்துக்கொண்டு நாராயணபுரஞ்சென்று குறி சொல்லு
கிறேனென்று வீதிகளில் கூவக் கொண்டுபோனார். இப்படியிருக்க
பத்மாவதிதேவி நந்தவனத்தில் ஸ்ரீ ஹரியைக் கண்டநாள்முதல் தாப
ச்சுரம் உள்ளவளாய அன்னபானங்கள் தொடாமல் இருந்தாள். அத்
காரணத்தால் ஆகாசராஜனும் தரணிதேவியும் மிகுந்த விசனத்துடன்
இருந்தார்கள். ஆகையால் தரணிதேவி தன் சேவகர்களால் யாரோ
ஒரு குறத்தி ஊரில் வந்து குறிசொல்லுகிறாளென்று கேள்விப்பட்டு
பத்மாவதி விஷயமாய் குறிகேட்க எண்ணங்கொண்டு அக்குறத்தியை
த்தன்னிடம் அழைத்துக்கொண்டு வரும்படி சேவர்களுக்கு உத்தர
வளித்தாள். அவ்வண்ணமே சேவகர்களும் மாயக் குறத்தியை ய
ழைத்து வந்துவிட, அவளுக்கு தரணிதேவி தக்ஷணை தாம்பூலங்கொ
டுத்து, தன் மனதிலிருக்கும் ஓர் எண்ணத்தைப்பற்றி குறிசொல்லும்
படி கேட்டாள். அப்பொழுது அந்த மாயக்குறத்தி தன் கையிலிரு
ந்த பிரம்பை தரணிதேவி கையில் கொடுத்து விக்னேஸ்வரா, வீரபத்
திரா, மலையாளபகவதி, மதுரைமீனாக்ஷி, கஞ்சிகாமாக்ஷி, கனகதுர்காம்
பா, கியானம்பா, கொல்லாபுரலக்ஷ்மி நீங்களெல்லோரும் எனக்கு
வாக்கை கொடுங்களென்று சொல்லி தரணிதேவியைப் பார்த்து, அம்
மா நீ எண்ணின எண்ணம் நிறைவேரும் நீ ஓர் பெண்குழந்தையைப்
பற்றி குறிகேட்டாய். அந்தப் பெண்மனதில் ஓர் எண்ணம் இருக்கி
றது. அவள் நந்தவனத்தில் பூக்கொய்துக் கொண்டிருக்கையில் ஓர்
புருஷனைக் கண்டாள். அந்த புருஷன் ஸ்ரீமந் நாராயணனேயன்றி
வேறொருவரல்ல. அந்தப் புருஷனை விவாகம் செய்துக்கொள்ள உன்
பெண் ஆசைகொண்டிருக்கிறாள். அவரும் இந்தப் பெண்ணை விவாக
ம் செய்துக்கொள்ள இச்சையுள்ளவராயிருக்கிறார். அந்த காரணத்
தால் உன் பெண்ணுக்கு தாபச்சுரம் உண்டாயிருக்கிறது. உன் பெ
ண்ணை அவருக்கு கொடுத்து விவாகம் செய்தால் அளவற்ற சுகங்கள்
உண்டாகும். இந்த விஷயமாய் விவாகபிரஸ்தாபனை செய்வதற்காக
இன்னும் சிலநேரத்திற்குள் இவ்விடம் ஓர் பெண்பால் வருவாள்

Koviloor Digital Library

கட மலையைச் சேர்ந்தார்.

நாராயணபுரத்தில் ருத்திராபிஷேகம் செய்தல்.

ஆகாசராஜன் தன் பெண் தாபச்சுரம் அடைந்திருப்பதைப் பற்றி மிகுந்த வருத்தமுள்ளவனாய்ப் பிராமணோத்தமர்களை வரவழைத்து என்னசெய்யலாமென்று யோசிக்கையில் அவர்கள் ருத்திராபிஷேகம் செய்து அச்சலத்தை பத்மாவதிக்கு கொடுத்தால் சுகுணம் பிறக்குமென்று சொல்ல ராஜன் அப்படி செய்ய சம்மதித்தவனாய் சேவர்களுக்கு உத்தரவளித்தான். ஆகையால் ருத்திரமூர்த்தி தேவாலயத்திலிடம் அனேக சுமங்கலி ஸ்திரீகள்சேர, வகுளமாலிகை அவர்களோடு சேர்ந்துக்கொண்டு தரணிதேவியினிடம்போக நிச்சயித்து ருத்திராபிஷேக தீர்த்தத்தை யெடுத்துக்கொண்டு போகையில் தானும் தரணிதேவியினிடம் சென்றான். பிறகு வகுளமாலிகை தரணிதேவியைப்பார்த்து பத்மாவதியை திருவேங்கடபெருமானுக்கு கொடுக்கவேண்டுமென்று கலியாணப் பிரஸ்தாபனை செய்ய தரணிதேவி அச்சங்கதியை ஆகாசராஜனிடம்தெரிவித்து இருவரும் பிரம்மானந்தமுள்ளவர்களாய் தங்கள் குருவாகிய சுகயோகியினிடம் லக்னபத்திரிகை யெழுதி யவரிடமே கொடுத்து ஸ்ரீநிவாசனுக்கு அதைத் தரும்படி சொன்னார். சுகமகரிஷி அப்பத்திரிகையை எடுத்துக் கொண்டு வெங்கடாசலம் சென்று ஹரி யிடம் கொடுக்கையில் சுவாமி அந்த சுபரேகையை பெற்றுக்கொண்டு மிகவும் சந்தோஷ முள்ளவராய் உவ்ர்தயாகவே வைகாசிமாதம், சுத்ததசமி இராத்திரி முகூர்த்தத்திற்கு நாங்கள் பரிஜனங்களோடு வருகிறோமென்று பதில் பத்திரிகையை எழுதி சுகரிடம் கொடுத்தனுப்பினார்.

ஸ்ரீவெங்கடேஸ்வர பத்மாவதிதேவி திருக்கல்யாண மஹோற்சவம்.

அப்பொழுது கருத்மந்தனும் ஆதிசேஷனும் அந்த சுபவார்த்தையை நீலகண்டனுக்கும் பிரம்மதேவனுக்கும் இன்னும் சகலமான

Koviloor Digital Library

தேவகோடிகளுக்கும் தெரிவித்தார்கள். பிரம்மா, சாவித்திரி, காயத்திரி, சமேதராய் மகரிஷிகளை அழைத்துக்கொண்டு அன்னவாகனமேறிவந்தார். சந்திர சேகரன் பார்வதி, சமேதராய் பிரமதகணங்களை யழைத்துக்கொண்டு ரிஷபவாகன மேறிவந்தார். சூரியன் கொல்லாபுரம் சென்று லக்ஷ்மிதேவியை யழைத்துக் கொண்டுவந்தான். வசிஷ்டர் வராக சுவாமி சந்நிதியில் கிரகயக்யபிரயத்தினங்களை செய்துக் கொண்டிருந்தார். சுப்பிரமணியசுவாமி பாண்டவதீர்த்தம் முதல் ஸ்ரீசைலம் வரைக்குமுள்ள பிரதேசங்களை பரிசுத்தம் செய்தார். இவ்விதமாய் ஹரி சகல பரிவாரங்களோடு நாராயணபுரம் போகையில் ஆகாசராஜன் மந்திரி புரோகித பரிவாரங்களோடு எதிர்கொண்டுவந்து அவர்களை அழைத்துக்கொண்டுபோய் வைகாசி மாதம் வெள்ளிக்கிழமை சுத்த தசமி கூடிய சுபதின முகூர்த்தத்தில் பத்மாவதியை திருவேங்கட பெருமானுக்கு கன்னிகாதானம் செய்துகொடுத்தார். அப்பொழுது தேவகோடிகள் தம்பதிகளின்பேரில் புஷ்பமாரி பெய்தார்கள், ரம்பை, ஊர்வசி, திலோத்தமா தி தேவதாசிகள் நிருத்தனம் செய்தார்கள். மகரிஷிகள் வேதபாராயணம் செய்தார்கள் அருந்ததி முதலிய பிரமுகவாசினிகள் சோபனம் பாடினார்கள். ஊரெங்கும் மங்கள வாத்தியங்களை கோஷித்தார்கள்.

ஏன் வட்டிபணம் வெங்கடேசனென்பார்.

அந்கலியாண செலவுக்கு லக்ஷ்மிதேவி தன்னையிட்டு இருக்கும் காரணத்தாலும் ஹரியினிடம் பணமில்லாமல் போனகாரணத்தாலும் செலவுகளுக்காக சுவாமி குபேரனிடம் கடன்பத்திரம் எழுதிக்கொடுத்து அசல் கலியுகத்தின் முடிவில் கொடுக்கிரதாகவும், வருஷந்தோரும் வட்டி கொடுக்கிரதாகவும் ஏற்பாடுசெய்து அந்தக்கடன் பத்திரத்திற்கு பிரம்மாவையும், சங்கரனையும், சாக்ஷிகளாய் ஏற்படுத்தி ஒரு கோடி பதினன்கு லக்ஷம் 1,14,00,000 இருமடெங்கி நிஷ்கமங்களை கடன் வாங்கினர். இந்த கடனை நிவர்த்திசெய்யும் பொருட்டாக பக்த ஜனங்களிடம் பிரார்தனாமூலமாய் காணிக்கை வாங்குவதால்

Koviloor Digital Library

வெங்கடேசப் பெருமாளுக்கு வட்டி பணம் பெருமாளென்று உலகத்தில் பெயர் பிரசித்தியாயிற்று.

ஹரிக்கு ஆகாசராஜன் கொடுத்த ஸ்ரீதனத்தின் விவரம்.

விவாகத்தின் முடிவில் ஆகாசராஜன் சுவாமிக்கு நவரத்தின கசிதமான கிரிடங்களும். ரத்தின பதக்க ஹாரங்களும், விலையற்ற ரத்தினங்களிழைத்த கங்கண பூஷணங்களும், பீதாம்பரங்களும், பாதுகா யுக்மங்களும், கொடுத்தார். மேலும் வரிசைகளாக நாற்பது பாரமுள்ள கனிவர்க்கங்களையும், ஆயிரம் க்ஷீரபாண்டங்களையும், ஆயிரம் நெய்பாண்டங்களையும், இருநூறு சர்க்கரைபாண்டங்களையும்,கடுகு சீரகம், வெந்தயம் மிளகு, பெருங்காய் முதலியவைகளையும், நூறு பாண்டங்களையும், பத்தாயிரம், பசுக்களையும், திவ்யாபரண வஸ்திரங்களையும், நூறு தாசி ஜனங்களையும், முன்னூறு தாதி ஜனங்களையும் ஸ்ரீநிவாசனுக்குச் சமர்பித்தார். பிறகு ஸ்ரீநிவாசமூர்த்தி பத்மாவதியை யழைத்துக்கொண்டு திருவேங்கிட மலைக்கு வந்துசேர்ந்தார்.

ஹரி லக்ஷ்மியை தேடிபோதல்.

சேஷாசலத்தில் வெங்கடேசப் பெருமாள் பத்மாவதியுட னிருக்க லக்ஷ்மிதேவி விவாகம் முடிந்த உடனே மறுபடியும் கொல்லாபுரம் போய்சேர்ந்தனள். பிறகு வெகுகாலம் வெங்கடேசப் பெருமான் திருவேங்கடத்திலிருந்து லக்ஷ்மியை வக்ஷத்தில் அணிந்துக் கொள்ள வேண்டுமென்றெண்ணி பத்மாவதிக்கு உபசாந்திகளைச் சொல்லி அவ்விடம்விட்டு புறப்பட்டு கொல்லாபுரம்போனார். இதற்குள் கொல்லாபுறத்திலிருந்த லக்ஷ்மியம்மன் தன்னை ஹரி தேடவருகிறாரென்றறிந்து அவர் நேரில்வந்து யழைக்க வரமாட்டேனென்று சொல்வது நன்றன்றென்னி யிப்போதே யெவ்விடமாவதுபோய் ஒளித்துக்கொள்வது நலமென்றென்னி பாதாளலோகத்தில் தவஞ்செய்துக்கொண்டிருந்த கபிலமாமுனிவ ராஸ்ரமத்துக்கு ச்சென்று ஒளித்திருந்தாள்.

Koviloor Digital Library

ஹரி தவஞ் செய்தல்.

இவ்வாறு புறப்பட்டு ஹரி கொல்லாபுரஞ்சென்று லக்ஷ்மியைத் தேடுகையில் லக்ஷ்மியம்மன் அவ்விடமில்லாமற் போனபடியால் மிகு சிந்தனையுள்ளவராய் காடு மேடுகளைச் சுற்றி தேடிபார்த்தும் லக்ஷ்மி அகப்படாமற்போனபடியால் மறுபடியும் கொல்லாபுரம் சென்று பூர்வத்தில் அகஸ்தியமாமுனிவர் பூஜித்துக் கொண்டிருந்த லக்ஷ்மி விக்கிரகத்தைப் பார்த்து மோகித்து அவ்விடத்திலேயே குடியிருந்து பத்து வருடகாலம் தவஞ் செய்தார்.

ஆகாயவாணி ஹரிக்கு உபாயம் கூறுதல்.

இங்ஙனமிருக்க ஹரி ஒருநாள் லக்ஷ்மியைநினைத்து சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் அவரை நோக்கி ஆகாயவாணி இவ்வாறு சொன்னாள். ஓ சுவாமீ! இவ்விடத்திற்கு நேர் தெற்கில் கிருஷ்ணவேணி யென்னும் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு இருப்பதிரண்டு யோஜனைக் கப்பால் மிகவும் முக்கியமாகியபொன் முதலியாறு இருக்கிறது. அதற்கு சமீபத்தில் நின்று தபசியாய் சுவர்க்க லோகத்திலுள்ள திவ்விய சுவர்ன கமலம் வரவழைத்து அதைத் திருக்குளத்தில் விட்டு அதற்கு கிழக்காக கமலம் வாடாமலிருப்பதற்கு சூரியனை பிரதிஷ்டை செய்து அந்த கமலத்தில் திருஷ்டியை நிருத்தி பன்னிரண்டு வருஷம் லக்ஷ்மி மந்திரத்தை ஜபித்துக்கொண்டு தவஞ் செய்தால் லக்ஷ்மிதேவியை மறுபடியும்அடைவீரென்று சொன்னாள்,

ஹரி லக்ஷ்மியை நோக்கி தவம்புரிதல்.

ஆகாயவாணி சொன்னதைக் கேட்டு ஹரி சுகாஸ்ரமத்திற்குப்போய் வாயுதேவனை நினைக்க அவர் உடனே பிரத்யக்ஷமாய் எதிரில் வந்து நமஸ்கரித்து சுவாமீ! எனக்கு என்ன உத்தரவளிக்கப் போகிறீரென்று கேட்டார். ஹரி அவரை சுவர்கலோகம் சென்று அவ்விடம் மந்தாகினியிலிருக்கும் ஆயிரம் இதழ்களுள்ள கமலத்தை கொ

Koviloor Digital Library

ண்டுவாரு மெனசொல்ல அவ்விதமாகவே கொண்டுவந்து கொடுத்தார். பிறகு ஹரி திருக்குளத்தை யுண்டாக்கி அக்குளத்தில் பத்மத்தைப் பிரகாசிக்கச் செய்து கிழக்கில் சூரியனை நிறுத்தி திருக்குளத்திற்கு மேற்கில் பத்மாசனமிட்டு உட்கார்ந்து கமலத்தில் திருஷ்டியை நிறுத்தி லக்ஷ்மிமந்திரத்தை ஜெபித்துக்கொண்டு தவம்புரிந்தார்.

தேவேந்திரன் நடனமாதர்களை யனுப்புதல்.

ஹரி தவம் செய்துக்கொண்டிருக்க தேவேந்திரன் கண்டு யாரோ ராஜன் தன் பதத்தை அடைவதற்கென்னி தவம்செய்கிறானென்றெண்ணமுடையவனாய் தபோபங்கம் செய்யவெண்ணி, தனது அரங்கத்தில் நடக்கும் ஊர்வசி முதலிய தேவதாசிகளை யனுப்பினான் அவர்கள் மணிபூஷண வஸ்த்ரபுஷ்ப சந்தன முதலியன தரித்துக்கொண்டு புஷ்பமாலைகளைக்கண்டத்தில் அணிந்து கைகளில் தாம்பூலத்தைத்தரித்துக்கொண்டு ஹரி தவம் செய்யுமிடத்துக்கு வந்து சிருங்காரமான உத்தியான வனத்தில் பூக்கொய்துக் கொண்டும், கிளிகளைப் போல் சம்பாஷித்துக்கொண்டு கல கல வென்று சிரித்துக்கொண்டும், வீணைகள் வாசித்தும், நடனங்கள் செய்தும், ஆடியும், பாடியும் அநேகவிதமான மாயா கர்ஷணைகளை செய்தும் ஹரி சலிக்காமலிருப்பதைபார்த்து மிகவும் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஹரி ஜகன்மோகினியை சிருஷ்டி செய்தல்.

இப்படியிருக்க நாராயணன் விஸ்வமோகினி தேவதையை சிருஷ்டிசெய்து தன்னிடம் இருக்கச் செய்தார். அப்பொழுது ரம்பாதிகள் அந்த மோகினியின் ரூபரேகாவிலாசங்களைப் பார்த்து பிரமித்து ஆ! ஹா! இப்பேர்ப்பட்ட சுந்தரகன்னியா ரத்தினத்தை சிருஷ்டி-செய்யக்கூடிய இந்த நாமதி சாக்ஷாத் ஜெகதீசனாயிருப்பானன்றி சாமான்னிய னல்ல வென்றெண்ணி அந்த முனீஸ்வரரான பெருமானுக்கு பக்தியுடன் நமஸ்காரஞ் செய்து அவ்விடம் விட்டகன்று சொர்

Koviloor Digital Library

க்கலோகஞ் சென்று தேவேந்திரனைக் கண்டு சுவாமி! எங்களாலான மாய வித்தைகளைச் செய்தும் அவர் சலிக்கவில்லை. அவர் லக்ஷ்மி சஹிதனேயன்றி சாமான்னியரல்ல வென்றூர்கள், பிறகு ஹரி தான் சிருஷ்டி செய்த மோகினி சக்தியை பார்த்து நீ உலகமெங்கும் சுற்றிக்கொண்டு ஜனங்களால் பூஜிக்கப்பட்டுக் கொண்டிருமென்று கட்டளையிட்டு மறுபடியும் முன்போல சலிக்காயல் தவஞ்செய்துக் கொண்டிருந்தனர்.

பத்மாவதி தேவியை வகுளமாலிகை சாந்தப்படுத்தல்.

இப்படி ஹரிதவஞ் செய்துக்கொண்டிருந்த திருமலையிலிருந்த பத்மாவதிதேவி ஹரி இன்னும் வரவில்லையென்று மிகவும் கவலைப்பட்டுக்கொண்டு தினந்தோறும் தபசி வேஷத்தை தரித்து நிஷ்டாரூடராயிருப்பதைப் போல் சொர்பனங் கண்டு துயரப்படுவதைப் பார்த்து வகுளமாலிகை அடிக்கடி அத்தேவிக்கு சாந்த வசனங்களை சொல்லி சமாதானப் படுத்திக்கொண்டு வந்தனள்.

லக்ஷிமிதேவிக்கும் கபிலமாமுனிவருக்கும் சம்வாதம்.

கபிலாஸ்ரமத்தில் ஒளித்துக் கொண்டிருந்த லக்ஷ்மியம்மன் தனக்காக ஏன் ஹரி தவஞ்செய்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் வெங்கடாசலத்தில் பத்மாவதிதேவி துயரமடையவேணு மென்றும் எண்ணி சிந்தித்து கபிலமுனிவரைக் கண்டு ஓ முனியே! நான் என் செய்வேனென்று கவலையுடன் யோசிக்க அம்மகாமுனி அத்தேவிக்கு மனஸ்தாபமுண்டான காரணங்களை கேட்டறிந்துக் கொண்டு ரமாதேவியை நோக்கி அம்மே! நீங்கள் ஹரியை பிரிந்திருப்பது நியாயமல்ல பிருகு உன்னுடைய பேரனுதும் நீ கோபம்செய்துக்கொண்டு ஹரியை விட்டகன்று கொல்லாபுரம் போகலாமோ? பிருகு மும்மூர்த்திகளையும் பரீக்ஷித்து விஷ்ணு தேவனுடைய பிரபாவத்தை புலகமெங்கும் வியாபிக்க செய்வதற்காக ஹரி மார்பில் உதைத்தானேயன்றி

Koviloor Digital Library

கர்வத்தாலல்ல. இதை நீ அறியாமல் கோபித்துக் கொண்டு இவ்விதமாய் வரலாமா? ஹரி 22 வருஷங்களாக இவ்வித தவஞ்செய்துக் கொண்டிருக்க நீயவரைப் பிரிந்திருப்பது நியாயமல்ல. அவரைச் சேருவது உத்தமமென்று சொன்னார்.

கபிலமாமுனி லக்ஷிமிதேவிக்கு உபாயம் கூறுதல்.

இவ்விதமாய் கபிலமாமுனி சொல்ல லக்ஷ்மி ஹரியை மறுபடியும் சேருவதற்கு உபாயம் சொல்லுமென வினவ, கபிலமாமுனிவர் தாயே! நீ வாஸுதேவன் திருஷ்டியை வைத்திருக்கும் கமலத்தின் கொடிவழியாய்ச் சென்று கமலத்தின்பேரில் அவதரித்து லக்ஷ்மீசன் வக்ஷத்தில் சேர்ந்து ஜெகத் பிரஸித்தியடைவாயென்று கூறினார்.

பத்மாவதிதேவி அவதரித்த பிரபாவம்.

கபிலமாமுனி கூறியதைக் கேட்ட லக்ஷ்மி நான் இப்பொழுது இத்தேகத்துடன் அவதரித்தால் ஹரி என்னைப் பார்த்து நகைப்பாரே, நான் செய்த அபசாரத்திற்கு ஹரி என்னை க்ஷமிப்பாரோ என்று நினைத்துக் கொண்டு திவ்விய தேகத்துடன் பத்மநாளத்துக்குள் புகுந்து நாளத்தின் வழியாய்ச் சென்று தாமரையின் நடுவில் நிற்க ஹரி லக்ஷ்மியம்மனைத் தரிசித்து பிரம்மானந்தத்துடனிருக்கையில் லக்ஷ்மியம்மன் தான்செய்த அபசாரத்திற்காக வெட்கத்துடன் பேசாமல் சும்மா நின்றிருந்தனள். அப்பொழுது பிரம்மருத்திராதி தேவகணங்கள் அவர்கள் வாகனங்களிலாரோகணித்து அவ்விடம்வந்து இருவர்களையுங்கண்டு புஷ்பவருஷங்களைப் பொழிந்து சுயவாத்தியங்களைக்கோஷித்து ஹரி கீர்த்திகளை அநேகவிதங்களாய்க் கொண்டாடி பத்ம திருக்குளத்தில் அவதரித்த லக்ஷ்மிதேவிக்கு அநேக நமஸ்காரஞ்செய்து அந்த அம்மனை நோக்கி தாயே நீர் பரந்தாமனுடைய மார்பில் சேர்ந்து பிரசித்தமாய் எல்லோரையும் ரக்ஷிக்கவேணுமென்றும், இன்றையதினம் கார்த்திகைமாதம் சுத்த பஞ்சமி வெள்ளிக்கிழமை உத்திராடம் கூடிய சுபதின மாகையால் ஹரி மார்பில் சேரவேணுமென்றும் பிரார்த்தித்தார்கள்.

Koviloor Digital Library

பிருகுமுனிவர் லக்ஷ்மியம்மனை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுதல்.

பிரம்ம ருத்திராதிகள் அனைவரும் கேட்டுக்கொண்டும் லக்ஷ்மியம்மன் சும்மாயிருப்பதைப் பார்த்து பிரம்மதேவர் பிருகுவுக்கு கண் ஜாடைகாட்டினர். அப்போது பிருகுமாமுனி முன் வந்து நின்று லக்ஷ்மியம்மனுக்கு சாஷ்டாங்க தண்டனிட்டு என்பெற்றதாயே! நீ மன்னிக்காமல் போனால் என்னையார் ஆதரிப்பார்கள் அடியேன் செய்த குற்றத்தை மன்னித்துக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்பொழுது லக்ஷ்மியம்மன் பிருகுமாமுனியை நோக்கி ஓ முனியே! நீ மும்மூர்த்திகளில் சத்வகுண பிரதானன் ஹரி யென்று ஸ்தாபிப்பதற்காக செய்த உன்னிட பக்திக்கு மெச்சினேனென்று சொன்னாள்.

பத்மாவதி ஹரி மாற்பில் சேர்ந்த மகோற்சவம்.

தேவகணங்கள் எல்லோரும் லக்ஷ்மி யம்மனை ஹரி மாற்பில் சேருமென பிரார்த்தித்திக்கொண்டிருக்கையில் தங்க பிரதிமையைப்போன்ற திருமேனியுடனும் அனந்தகோடி ஆபரணங்களை தரித்துக்கொண்டும். பரிமள கெந்தலேபனங்களுடனும் அநேகவித அலங்காரங்களோடும் கூடினவளாய் புஷ்பங்களால் கட்டிய ஹாரத்தை திருவேங்கடப்பெருமான் கழுத்திலிட்டு பரந்தாமன் திருமார்பினை யடைந்தாள். ஆகாயத்தில் தேவர்களும் மகருஷிகளும் புஷ்பமாரி பொழிந்தார்கள். அப்சரஸ்திரீகள் நடனமாடினார்கள். நாரதர் தும்புரு முதலியோர் பாடினார்கள். சார்வாணியும் சரஸ்வதியும் மங்கள ஆரத்தியெடுத்தார்கள். தேவகணங்களும் பிரம்மாவும் வேத கோஷ்டம் செய்தார்கள்

Koviloor Digital Library

அலர்மேல்மங்காபுரத்திலுள்ள திருக்குளத்தின் பிரபாவம்.

அப்பொழுது பிரம்ம ருத்திராதிகள் லக்ஷ்மியம்மன் அவதரித்த திருக்குளத்தில் கார்த்திகைமாதம் சுத்த பஞ்சமிதினத்தில் ஸ்நானம் செய்தவர்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷமுண்டாய் சகலசுகங்களு முண்டாகுமென்று அத்தீர்த்தத்தின் பெருமையைக் கொண்டாடி அவர்கள் சிரசுகளின்பேரில் அத்தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக் கொண்டார்கள்.

ஹரி வெங்கடாசலம் சேருதல்.

பிறகு பிரம்ம ருத்திராதிகள் தத்தம் வாகனங்களில் ஏறிக்கொண்டு லக்ஷ்மி நாராயணமூர்த்திகளை யழைத்துக்கொண்டு திருவேங்கடமலையேறி ஹரியை அவ்விடம் லக்ஷ்மி பத்மாவதி பூநீளா தேவிகளுடன் எழுந்தருளச் செய்தார்கள். அப்பொழுது வகுளமாலிகை பிரம்ம ருத்திராதிகளுக்கு விருந்துசெய்து வஸ்திராபரண சந்தன புஷ்ப தாம்பூலங்களைக் கொடுக்க அவர்களெல்லோரும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் லக்ஷ்மி நாராயணனை நமஸ்கரித்து அவரவர் உத்தரவின்பேரில் யதாஸ்தானங்களுக்குப் போனார்கள். பிறகு ஸ்ரீமந் நாராயணன் லக்ஷ்மி பத்மாவதி தேவிகளோடு துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செயதுங் கொண்டு கலியுகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமாய் ஸ்ரீ வெங்கடாசலத்தில் எழுந்தருளினார்.

திருவேங்கடப் பெருமான் கலியுக தெய்வமென்பதற்கு காரணம்.

இலக்ஷ்மி சமேதராய் திருவேங்கடத்தில் எழுந்தருளிய பெருமான் ஒருநாள் லக்ஷ்மியை நோக்கி நான் பத்மாவதி விவாகத்திற்காக குபேரனிடம் வாங்கிய கடனை நிவர்த்தி செய்யவேணுமென்றும், அப்படி செய்யாமற்போனால் கடன் வட்டியுடன் அதிகமாய்விடுமே யென்ன செய்யலாமென்றும் யோசித்தார். அதைக்கேட்டு

Koviloor Digital Library

லக்ஷிமிதேவி சுவாமீ! நீங்கள் கடன் செய்தபோது என்னைக்கேட்டு செய்தீரா? இப்பொழுது கடனை நிவர்த்திசெய்யும்படி என்னுடன் யோசிக்கிறீரேயென்று சொல்லி குபேரனிடம் நேரிட்ட கடனை இப்பொழுதே நிவர்த்தி செய்கிறேனென்று சொன்னாள். அதைக்கேட்டு ஹரி இப்பொழு நாம் கடனைத் தீர்க்கவேண்டியதில்லை. கலியுகத்தின் முடிவில் தீர்க்கலாம். அதுவரை வெங்கடாசலத்திலிருந்து ஜனங்களுடைய பாவங்களைப் போக்கடித்துக்கொண்டிருக்க வேலைகள் நிரம்பவு மிருக்கின்றது,

திருவேங்கடபெருமான் ஒருவரே கலியுகத்தில் பாவங்களை ‘போக்குந் தெய்வம்.

இங்ஙனம் ஹரி லக்ஷிமியுடன் சொல்லிக்கொண்டு கலியுகத்தில் ஜனங்கள் பாவகாரியங்களைச் செய்து அதனால் ரோகாதி தாபத்திரியங்கள் உண்டானபோது பயந்தவர்களாய் தற்காலத்தில் என்னை நோக்கி முறையிட்டபோது நான் அவர்களுடைய ஆபத்துகளை தீர்க்காமல் சும்மாவிருக்ககூடுமா? ஆகையால் அவர்களுடைய பாவகர்மங்களை அவர்கள் திரவியங்களின்பேரில் ஆகர்ஷணை செய்து அவர்கள் ஆபத்துகளைநீக்கி அப்பொருளை என் மலைக்கு வரவழைத்து அப்பாவரூபமான பொருளை அஞ்ஞானமுள்ள ஜனங்களுக்கு கொடுப்பேன். புண்ணியர்களால் எனக்கு சமர்பிக்கப்பட்ட பொருள்களில் ஒரு பாகம் நான் எடுத்துக்கொண்டு கலியுக காலமெல்லாம் கழித்துக்கொண்டு மற்றொருபாகம் குபேரனுக்கு வட்டி செலுத்திக்கொண்டு கலியுக காலமெல்லாம் கழித்துக்கொண்டு வருகிறேன். ஆகையால் நீ கலியுகத்தில் எல்லோருக்கும் திரவியங்களைக் கொடுத்துக்கொண்டு வந்தால் நான் அத்திரவ்வியங்களை ஆகர்ஷணைசெய்து சுஜன துர்ஜனங்களுக்கு கொடுத்துக்கொண்டு வருகிறேன்.

Koviloor Digital Library

ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் பிரார்த்தனையின் ரகஸ்யம்.

இப்படிச்சொன்ன ஹரியைப்பார்த்து லக்ஷ்மிதேவி சுவாமி நான் கலியுகத்தில் ஜனங்களுக்குப் பொருளைக்கொடுத்தால் அவர்கள் தானதர்ம முதலிய சத்காரியங்களைச் செய்யாமல் பேராசை லோப குண முதலியவைகளுள்ளவர்களாய் பாவப்பெருக்கினால் நசித்து விடுவார்களே! அப்படியிருக்க நீர் எவ்விதமாய் அவர்களிடம் பொருளை ஆகர்ஷணை செய்வீரென்று கேட்ட லக்ஷ்மியை நோக்கி, பகவான் நீ சொன்னது உண்மையே. கலியுகத்தில் பிறந்தவர்களுக்கு லோபகுணமிருப்பது சகஜமாயிருந்தாலும் அவர்கள் பொருள்களை ஆகர்ஷணை செய்வதற்கு என்னிடத்தில் ஓர் யுக்தி உண்டு, அதாவது ஜனங்கள் பாவங்களைச் செய்தார்கள். அதனால் ரோகாதி பாதைகளை யடைவார்கள். அக்காலங்களில் என்னை நினைப்பார்கள், நான் அப்பொழுது அவர்கள் சொப்பனங்களில் பிரத்யக்ஷமாய் அவர்கள் பொருளை சுவல்பமாய் முடிப்பு எடுக்கச் செய்து அந்த சுவல்ப திரவியத்திற்கு விஸ்தாரமாக வட்டியை வளரச்செய்து வருஷந்தோறும் அவர்களைத் தண்டித்து வெங்கடாசலத்திற்கு வரவழைத்து அவர்கள்கொடுத்த திரவ்வியங்களை சாதுக்கள் முதலிய நல்லோர்க்கு வினியோகப்படுத்தி பாபிகளால் கொடுத்த பொருளைதுர்ஜனர்களுக்குப் பிரித்துக்கொடுத்து அவர்களால் எனக்கு சந்தர்ப்பணை செய்யும்படி ஏற்படுத்தி சகலதானங்களும் செய்யும்படி யேற்படுத்தி அவர்கள்செய்யும் தானங்கள் சுவல்பமாயிருந்தபோதிலும் அதற்கு விசேஷபலனைக் கொடுத்து கிரமமாய் அவர்களை புண்ணியர்களாகச் செய்து ரக்ஷிப்பேன். ஆகையால் நீ யெல்லோருக்கும் திரவியங்களைக் கொடுத்துக் கொண்டு வரவேண்டும்.

Koviloor Digital Library

ஸ்ரீவெங்கடாசலத்தில் செய்த தர்மத்தின் பெரும்பலம்.

இக்கலியுகத்தில் கலிபுருஷன் சகல தர்மங்களைக் கொடுத்து மேலும் கீழுமாகச் செய்வான், பாவங்களை அதிகமாகச் செய்யும்படி துர்குணங்களை விசேஷமாயுண்டாக்கி நற்குணங்களை மேலிடாமல் அடக்கி ஜனங்களை அநேகவித துன்பங்களையுண்டாக்கி ரௌரவாதி நரகத்தில் தள்ளுவான், ஆகையால் என் பக்தியுள்ள ஜனங்களை நான் ரக்ஷிக்கவேண்டும். நீ எனக்கு சகாயமாயிருந்து ஜனங்களுக்கு பொருளை மேன்மேலும் கொடுத்துக் கொண்டு வரவேண்டியது. குபேரனுக்கு கடன் கலியுகத்தின் முடிவில் கொடுக்கலாம் இப்பொழுது அவசியமில்லை யென்று சொன்னார். அதைக்கேட்டு லக்ஷ்மி தேவி சுவாமியை நோக்கி ஓ மகாத்மா? உலகத்தில் தான் தர்ம பரோபகாரங்கள் செய்யும் புண்ணியர்களுக்கு மேன்மேலும் பொருளை யதிகரிக்கச் செய்வேன், பாபிகளுடைய பொருளை நாளுக்கு நாள் க்ஷீணிக்க செய்வேன், எவ்வளவு சுவல்பமான வஸ்துவா யிருந்தபோதிலும் உனக்கு அற்புதம் செய்யும் புண்ணியோர்களுக்கு அளவற்ற செல்வங்களைதருவேன். இப்படி லக்ஷிமியம்மன் சொன்னபிறகு சுவாமி ஸ்ரீவெங்கடாசலத்தில் எவ்வளவு சுவல்பமான தர்மஞ் செய்தபோதிலும் அதற்கு அளவற்ற பலன்கள் உண்டாகுமென்றும், திரிகாண சுத்தியாய் இந்த க்ஷேத்திரத்தில் என்னைப் பூஜித்தவர்களுக்கும், என்னை அசஞ்சல மான பக்தியோடு தியானித்தவர்களுக்கும் இஷ்டசித்தி முதலிய நற்பலன்கள் உண்டாகுமென்றும் அருளினார்.

ஸ்ரீராமர் திருப்பதிக்கு எழுந்தருளிய சரித்திரம்.

ஸ்ரீராமர் இராவணனை சங்கரிக்கும் பொருட்டாக ஆஞ்சநேய சுக்ரீவ, அங்கத, நள, நீல, சாம்பவன் முதலிய வானர வீரர்களோடு இலங்கைக்குப் போய்க்கொண்டு ஸ்ரீ திருப்பதியின் வழியாய் வர, திருப்பதியிலிருந்த ஆஞ்சனாதேவி யவரை வெங்கடாசலத்திற்கு வந்

Koviloor Digital Library


துபோதும்படி பிரார்த்தித்துக்கொண்டனள். அதற்கு ராமபிரான் யான் இலங்கைக்குச் சென்று இராவணனைக் கொன்று திரும்பி வருகையில் அவ்விடம் வருகிறதாக சொல்லிக்கொண்டிருக்க ஆஞ்சநேயர் ஸ்ரீராமருக்கு முன்சென்று சாஷ்டாங்க தண்டனிட்டு தன் தாயினுடைய பிரார்த்தனையை யங்கீகரிக்க வேணுமென்றும் வானர சைனியங்கள் வெகுதூரம் பிரயாணம் செய்தால் அலண்டிருக்கிறபடியால் அவ்விதமாய் வெங்கடாசலத்தில் தங்குவது நன்மையென்று பிரார்த்தித்தனர். அதற்கு ஸ்ரீராமபிரான் சம்மதித்தவராய் லக்ஷ்மணருடன் திருப்பதிமலை யேறிப்போகையில் அந்த புண்ணிய க்ஷேத்திரத்திலிருந்த முனிஸ்வரர்கள் அவருக்கு அநேக தண்டம் சமர்பித்துஸ்தோத்திரஞ்செய்து தன்யர்களாய் சத்தியலோகஞ் சென்றார்கள் பிறகு ஸ்ரீராமர் ஆஞ்சனாஸ்ரமத்திற்கு சென்று அவ்விடத்திற் கருகிலுள்ள ஆகாய கங்கையென்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நான முதலியன முடித்துக் கொண்டு நிற்கையில் ஆஞ்சனாதேவி பலபுஷ்பங்களைச்சமர்பித்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடைய திருவடிகளைப் பூசித்தனள். அதற்குப் பிறகு அவர்கள் சுவாமி புஷ்கரிணிக்கு எழுந்தருளி ஜெயப்பிரத சங்கல்பத்துடன் ஸ்நானம் செய்து அந்த தீர்த்தத்தின் அருகாமையிலுள்ள சிருங்கார வனத்தில் வசித்திருக்கையில் ஆஞ்சநேயர் அநேகவிதமான கந்த மூல பலங்களையும், தேனையும் கொண்டு வந்து சமர்பிக்க, ராம லக்ஷ்மணர்கள் அவைகளையும் பரிவாரங்களோடு புசித்து சம்பூரண சந்தோஷமுள்ளவர்களாய அன்றவ்விடத்தில் தங்கியிருந்து மறுநாள் மலையிறங்கி இலங்கைக்குச் சென்று இராவணனைக் கொன்று சீதாசமேதராய் மறுபடியும் சாகேதபுரம் சென்றனர்.

திருப்பதிக்குள்ள அநேகவித பெயர்கள்

இந்த க்ஷேத்திரம் பக்தஜனங்களுடைய எண்ணங்களை ஈடேற்றுமாகையால் இதற்கு சிந்தாமணி யென்றும், இவனுறையும் ஞானவான்களுக்கு மேன்மேலும் ஞானம் அதிகரிக்கிறபடியால், ஞானத்திரி யென்றும் சகல புண்ணிய தீர்த்தங்களு மிருக்கிறபடியால் தீர்த்தாசல மென்றும், ஸ்நான ஜெபதபங்கள் செயவதற்கு வேண்டிய புஷ்கரிணிக ளநேகமிருப்பதால் புஷ்கராகிரி யென்றும், தங்கப்புதைக

Koviloor Digital Library

னால் நிறைந்திருப்பதால் கனகாத்திரி யென்றும், பூர்வத்தில் மஹாவிஷ்ணு நரசிங்காவதாரத்தைக் கொண்டு இரண்ணியகசிபனைக் கொன்றபடியால் நரசிம்மாசலமென்றும், ஆஞ்சனாதேவி தபஞ்செய்து அனுமானைப் பெற்றெடுத்தபடியால் ஆஞ்சனாத்திரி யென்றும் கருத்மந்தன் வைகுண்டத்திலிருந்து கொண்டுவந்தபடியால் வைகுண்டகிரியென்றும், கருடாசலமென்றும், மஹாவிஷ்ணு லக்ஷ்மியை மார்பிலணிந்து ஸ்திரமாயிருப்பதால் ஸ்ரீநிவாசமென்றும் இன்னும் அநேக நாமங்களுண்டயிருக்கின்றன, சுபம்.



Koviloor Digital Library

தீர்த்தமஹாத்மியம்.



கபில தீர்தோத்பத்தி.

பாதாளலோகத்தில் கபிலமாமுனிவர் அனுதினமாய்ப் பூஜித்துவந்த லிங்க மொருநாள் பூமியைப் பிளந்துக்கொண்டு வெளிப்பட்டிருக்க, பிரம்மா முதலான ஸமஸ்த்த தேவர்களும் அவ்விடம் வந்து அந்த லிங்கத்திற்கு பூஜாபிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து பரமசிவனை தியானிக்கையில் ஈசுவரன் அவர்களுக்குப் பிரஸன்னமாகி நீங்களென்ன வபேக்ஷிக்கின்றீர்கவிலம்புங்களென, அத்தேவதைகள் கேட்டு ஸ்வாமி! தாமிவ்விடத்தில்தானே நிவஸித்துக் கொண்டு ஸமஸ்த மானிடர்களுக்கும் சேவை தந்துக் கொண்டிருக்கவேண்டுமென பிரார்த்திக்க, பரமசிவன் கேட்டு, ஓ வானவர்களே இப்போது பூமியை பேதித்து உதித்தலிங்கத்தை இவ்விடத்தில் பிரதிஷ்டை பண்ணிவைத்தால் அதில்யாம் நிவஸிக்கிறோமெனமொழிய அத்தேவதைகள் அந்தலிங்கத்திற்காலய மியற்றி அதில் பிரதிஷ்டை செய்தனர்கள் அனந்தரம் கபிலமாமுனிவர் பாதாளத்தில் தாம் நித்தியமும் பூஜித்துவருகிற லிங்கத்தைக் காணமல் சிலகாலம் வியாகூலமடைந்திருந்து பின்பு தியான நிஷ்ட்டியால் அந்த லிங்கம் பூலோகத்திற்குப் போய்விட்டதென அறிந்துக் கொண்டு தாமும் பூமியில் பிலஞ்செய்து அவ்வழியாகவே பாதாளகங்கையைக் கொண்டுவந்து லிங்கத்திற்கபிஷேகம் பூஜாபிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து இபபோது மவ்விடத்தில் தானே அதிருசயனாராதித்துக் கொண்டிருக்கின்றனர், ஆகையாலது கபிலேசுவரரெனவும் இவ்விடத்திற்கு கபிலமுனிவர் கொண்டுவந்த பாதாளகங்கை கபிலதீர்த்தமெனவும் பிரஸித்தியுடைந் திருக்கின்றன,

ஆகாசகங்கை உற்பத்தி.

பூர்வகாலத்தில் ஒரு பிராம்மணோத்தமன் தான் பகவத்கடாக்ஷத்தினால் விஷ்ணு பதவியடைய வேணுமென்றெண்ணி வேங்கடகிரிக்

Koviloor Digital Library

கு வந்து அவ்விடத்தில் நாராயணன் ஆஞ்ஞையால் லோகோபகாரத்தின் பொருட்டு வீற்றிருக்கும் ஆகாசகங்கையில் நீராடி நாராயணதியான பரனுக இருக்கையில் அவனுக்கு ஸ்ரீ வேங்கடேசன் பிரஸன்னமாகி உனக்கென்ன வரம் வேண்டு மியம்புமென பிராம்மணன் தனக்கு விஷ்ணு ஸாலோக்கிய பதவிவேண்டுமென விரும்ப அதை பரந்தாமன் கேட்டு ஒப ‌நீ இன்னுங்கொஞ்சநாளைக்கு இந்த ஆகாசகங்கையில் மூழ்கியென்னை ஆராதித்துக் கொண்டிருப்பாயானல் அனந்தர முனக்கு ஸாலோக்கியபதவி யுண்டாகுமென வரமளித்து அந்தர்தானமாய விட்டனர். அந்த தீர்த்தத்தில் ஸ்னானஞ் செய்துக்கொண்டிருந்து கடைசியில் பரமபதமடைந்தனன். அந்த ஆகாசகங்கை இப்பவும் அவ்விடத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் அத்தீர்த்தத்தில் சித்திரை மாஸம் சுக்லபக்ஷம் பௌர்னமியதினம் ஸ்னானஞ் செய்து ஸ்ரீநிவாஸமூர்த்தியை ஸேவித்தால் அப்படிப் பட்டவர்களுக்கு இஹபரங்களில் ஸகலஸம்பத்துகளும், ஸகலரோக நிவாரணங்களும் பரத்தில் பரமபதவாஸமும் உண்டாகும்.

தொட்டி தீர்த்தம்.

இதுவே கடாஹதீர்த்தமென்று சொல்லுகிறர்கள் அது ஸ்வாமி கோயில் இரண்டாம் பிரதக்ஷிணத்திலுள்ளது பூர்வம் ஸ்வாமியின் யபிஷேக தீர்த்தம் சோமசுந்தர (கோமுகம்) வழியாக விழுந்துகொண்டிருந்தது. யந்த துவாரம் சிலகாரணங்களால் மூடிவிடப்பட்டன இப்பொழுது சுவாமியின் யபிஷேக தீர்த்தத்தைப் பாத்திரங்களிற் கொண்டுவந்து ஊற்றுகிறர்கள் இதிலுள்ள யபிஷேகஜலத்தை நான்குவருணத்தாரும் பேதபுத்தியில்லாமல் பானஞ் செய்யவேண்டும்.

கோகர்ப தீர்த்தம்.

இது பாண்டவதீர்த்தத்திற்கு அதிக சமீபத்திலுள்ளது இது கோரூபமாய் பிளத்தில் நுழைந்தோடுகின்றது இதில் ஸ்னானஞ்செய்தால் பாபம் நீங்கும்.

Koviloor Digital Library

பாண்டவ தீர்த்தம்.

இது தேவாலயத்திற்கு ஈசானபாகத்தில் அரமயில் தூரத்திலுள்ளது. துவாபர யுகத்தில் பாண்டுராஜாவின் புத்திரர்களான தர்மபுத்திரர்கள் முகாதி இராஜ்யத்தை இழந்துவிட்டு வனவாஸஞ்செய்துக்கொண்டிருக்கையில் அவ்விடத்திற்கு நாரதரெழுந்தருளினர். பாண்டவர்கள் அவரைக்கண்டு தெண்டம் ஸமர்பித்து ஸ்வாமி யாங்களிவ்வரண்யத்தில் சகல கஷ்டங்களையும் மனுபவித்துக்கொண் டிருக்கின்றனம். ஆகையால் எங்கள் கஷ்டம் எவ்விதம் நிவர்தியாகுமென வேண்ட நாரதமுனிவரானவர் அவர்கள் துக்கத்தைக்கண்ணுற்று அவர்கள்மீது கருணையுண்டு இவ்விடம் மேற்கு பத்துகாததூரத்தில் யனேக தீர்த்தங்களினால் பிரசித்திக் கொண்டு வேங்கடகிரி யென்றுமொரு பர்வதமுள்ளது நீங்களவ்விடஞ்சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து அப்பர்வதத்தைப் பிரதக்ஷணம் செய்வீர்களானால் உங்களுக்கு ஸ்ரீநிவாசனுக்கிரஹத்தால் இராஜ்யம் கிடைத்து சகலகஷ்டங்களும் நிவாரணமாகுமென மொழிய, அப்பாண்டவர்கள் கேட்டு அப்பர்வதம் சென்று அங்கிருக்கும் சகல தீர்த்தங்களிலும் ஸ்னானஞ்செய்து அப்பர்வதத்தை பிரதக்ஷணம் செய்தபின் அங்குள்ள மற்றொரு தீர்த்தத்தில் ஸ்நான்ஞ்செய்துவிட்டு யத்தீர்த்தத்தில் நாராயண தியானபரர்களா யிருக்கையில் அவர்களுக்கு ஸ்ரீநிவாசமூர்த்தி பிரஸன்னராகி உங்களுக்குச் சீக்கிரமாக யுத்தத்தில சத்ருஜயலாபம் உண்டாகுமெனவும் நீங்கள் ஸ்னானஞ் செய்த யத்தீர்த்தம் உங்கள் நாமதேயத்தால் பெயர் வழங்கப் படுமெனவும் வரமளித்து அந்தர்தானமாய்விட்டார். சுபம்.

திருவேங்கட ஸ்தலபுராணம் சம்பூர்ணம்.



Printed at Sri Padmavathi Press, Tirupati:—1933.

Koviloor Digital Library

திருமலை மஹாத்மிய மென்னும்

ஸ்ரீ வெங்கடாசல புராணம்.



திருப்பதிஸ்தலம் வரக்கூடிய கனதனவான்களுக்கும் பக்திமான்களுக்கும் தெரிவித்துக்கொள்வ தென்னவென்றால் திருப்பதி திருமலை திவ்விய க்ஷேத்திரமகத்துவம் என்னும் புஸ்தகப். படங்களுடன் தயார்செய்து இருக்கிறது. பார்த்து வாங்கவும்,

ஸ்ரீ மஹாவிஷ்ணு வைகுண்டத்திலிருந்து வெங்கடாசலத்தில் அவதரித்ததும், மஹாலக்ஷ்மி ஹரியை விட்டுபிரிந்திருந்த காரணமும், பூதேவியாகிய பத்மாவதி அவதரித்த சரித்திரமும், திருவேங்கட பெருமான் திருக்கல்யாணம் செய்துக்கொண்ட மகோற்சவமும் திருப்பதி திருமலை ஸ்தளங்களிலிருக்கும் தீர்த்தமகிமை பக்தர்கள் தீர்த்தயாத்திரைசெய்து மோக்ஷமடைந்தவர்களுடைய பெயர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய லீலைகளும் அநேகமான புண்ணிய கன தனவான்கள் செய்யப்படும் தர்ம கைங்கர்யங்களும் அவர்கள் அமைத்திருக்கும் சத்திரங்களும் அன்னதான சத்திரங்களும் அமைத்து வைக்கப்பட்டவர்களுடைய பெயர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வருஷந்தோறும் நடத்துவரும் பிரம்மோற்சவங்களும் வஸந்தோற்சவம் நித்யோற்சவம் திருப்பதி திருமலை திருச்சானூர் வகைரு யிடங்களில் தேவஸ்தானத்தில் செலுத்தவேண்டிய கட்டண விபரங்களும் அதின் மூலம் ஒவ்வொரு விஷயங்களும் யெவ்வளவுதுகை கட்டவேணும் யென்ற விபரங்களும் மேல்கண்ட புஸ்தகமூலமாய் தெரிந்துகொள்ளலாம்.

அப்டோன் படங்களுடன் 350 பேஜியுள்ள பெரிய புத்தகம்

	க்லேஸ் காலிகோபைண்டு1-க்கு	1	8	0
ஷை	ரப் ஆப்பைண்டு	1	0	0

புஸ்த்தக விளம்பரம்,



திருமலை மஹாத்மியம் படங்களுடன் 350 பேஜிகளுள்ள கிலேஸ் காலிகோ பைண்டு	1	8	0
ஸ்ரீ திருமலைமஹாத்மியம் படங்களுடன் 350 பேஜ்களுள்ள ரப் அப் பைண்டு	1	0	0
ஸ்ரீ வெங்கடேஸ்வரர் பக்த விஜயம் வசனகாவ்யம்	0	6	0
ஸ்ரீ திருவேங்கடஸ்தலயாத்திரை வைபவம் 58 பேஜ்	0	4	0
ஸ்ரீ வெங்கடேச திருப்பதிகம்	0	1	0
ஸ்ரீ வெங்கடேஸ்வர தோத்திரமாலை	0	2	0
ஸ்ரீ திருவேங்கட ஸ்தல புராண யாத்திரை	0	6	0
ஸ்ரீ திருவேங்கட சதகம்	0	3	0
ஸ்ரீ திருவேங்கடமுடையான் கதைகள்	0	4	0
விநோதிர்த்த வெங்கடேசன்	0	2	0
ஸ்ரீ வெங்கடேசபெருமாள் சாக்ஷிசொன்ன சரிதை	0	1	0
ஸ்ரீ திருப்பதி வழி நடை யலங்கார பாட்டு	0	1	0
திருவேங்கடமுடைய பக்திரஸ பஜனை கீர்த்தனை	0	1	0
தேர்வண்டிக்கால் சரிதை கீர்த்தனை	0	4	6
௸ வசனம்	0	1	0
ஸ்ரீ அலமேலுமங்கையம்மன் சக்காரத்தியார் போர்ட்ட கொண்டாட்டம்	0	1	0
எழுமலை வெண்பா	0	1	0
வெங்கடேச பூஜாமஹத்யம்	0	2	6
திருவேங்கடமுடையான் சுண்டல் பாட்டு	0	1	6
ஸ்ரீ பத்மாவதி அம்மனுடைய பிரதாபவைபவ கீர்த்தனை	0	2	0

☞ இவைபோன்ற பல திருப்பதி க்ஷேத்திரத்தைப் பாற்றிய புத்தகங்களை கீழ்கண்ட விலாசங்களுக்கு எழுதிபெற்றுக்கொள்ளலாம்

எம். வி. ருத்திரைய்ய நாயுடு,

ஸ்ரீ வெங்கடேஸ்வர புக் டிபோ,

திருப்பதி. (சித்தூர்ஜில்லா,)

கெ. தேசிகாசார்லு, பட, புஸ்தகவியாபாரம். சிருகாநார்.

எம். ஹரிபூஷணம் நாயுடு, புஸ்தகவியாபாரம், திருமலை.